**ஒருங்கிணைக்கப்பட்ட வீதி முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் (I - வீதி) - 2021**

-----------------------------------------------------------------------------------------------------

ஒருங்கிணைக்கப்பட்ட வீதி முதலீட்டு நிகழ்சித்திட்டம் (I - வீதி) செயற்திட்டத்தின் 2021 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட பகுதி – 1 இற்கான 2014 நவம்பர் 05 ஆம் திகதிய 3171 - எஸ்ஆர்ஐ (எஸ்எவ்) ஆம் இலக்க, பகுதி - 2 இற்கான 2015 மே 28 ஆம் திகதிய 3221 - எஸ்ஆர்ஐ (எஸ்எவ்) மற்றும் 3222 - எஸ்ஆர்ஐ (எஸ்எவ்) ஆம் கடன் இலக்க மற்றும் பகுதி – 3 இற்கான 2015 டிசெம்பர் 11 ஆம் திகதிய 3325 - எஸ்ஆர்ஐ (எஸ்எவ்) மற்றும் 3326 - எஸ்ஆர்ஐ (எஸ்எவ்) ஆம் இலக்க கடன் இலக்க மற்றும் பகுதி – 4 இற்கான 2017 டிசெம்பர் 15 ஆம் திகதிய 3610 - எஸ்ஆர்ஐ (எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கைகளின் IV ஆம் உறுப்புரையின் 4.03 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

நிகழ்ச்சித்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், தற்போது போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு என அழைக்கப்படுகின்ற முன்னைய உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு கருத்திட்ட நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. கிராமிய சமூகங்கள் மற்றும் சமூக பொருளாதார நிலையங்களுக்கிடையில் வீதி அணுகுமுறையை அதிகரித்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமாகும். தேசிய மற்றும் மாகாண வீதிகளின் போக்குவரத்து வினைத்திறனை அதிகரிப்பதும் நெடுங்கால விளைவுகளாகும். கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 117,780 மில்லியனுக்குச் சமமான 906 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். அதில் ரூபா 104,000 மில்லியனுக்குச் சமமான 800 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஆசிய அபிவிருத்தி வங்கியால் வழங்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. மீதித் தொகை ரூபா 13,780 மில்லியன் இலங்கை அரசாங்கத்தினால் வழங்க எதிர்பார்க்கப்பட்டிருந்தது. நிகழ்ச்சித்திட்டத்தின் நிதித் திட்டம் பல்வேறு பகுதி வசதிகளின் கீழ் ஆறு பகுதிகளை கொண்டிருந்தது அதில் 04 வேறான கடன் உடன்படிக்கைகள் 557 மில்லியன் அமெரிக்க டொலர்களை நிதியீட்ட 2021 திசெம்பர் 31 வரை கையொப்பமிடப்பட்டிருந்தது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2014 ஜுன் 01 ஆந் திகதி ஆரம்பித்திருந்ததுடன் 2024 செப்தம்பர் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.1 ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து, செயற் திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாரா நிதி நிலைமையியையும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கருத்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கருத்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல | கணக்கீட்டுக் குறைபாடுகள் | தொகை ரூபா | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2,090.39 கி.மீ நீளமுடைய 541 கிராமிய மற்றும் தேசிய வீதிகள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உரிய முகவர்களிற்கு கையளிக்கப்பட்டிருந்தும், அதன் மீதான கிரயம் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இல. 01 இன் படி ஓர் சொத்தாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அறிந்துகொள்ள முடியாமலிருக்கும். | ஒவ்வொரு வீதிகளிற்குமாக ஏற்பட்ட மொத்த கிரயமானது செயலாற்றல் அடிப்படையிலான பராமரிப்பு காலம் பூர்த்தியாகி இறுதி கொடுப்பனவு பத்திரம் கிடைக்கப்பெற்றதன் பின்னர் மாத்திரமே தெரியவரும். | சொத்துக்கள் இலங்கை பொதுத்தறை கணக்கீட்டு நியமம் 01 இன் பிரகாரம் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | ஆலோசனை மற்றும் சிவில் வேலைகளின் செலவினங்களுக்கான ஏற்பாடுகளுடன் தொடர்புபட்ட கணக்கீட்டு கொள்கை மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அறிந்துகொள்ள முடியாமலிருக்கும். | கணக்கீட்டு கொள்கைகள் அடுத்த வருடத்திலிருந்து அமுலுக்குவரும்வகையில் செயற்திட்ட நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் கீழ் வெளிப்படுத்தப்பட்டிருக்கும். | கணக்கீட்டு கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |
| (இ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இல.8 இற்கு முரணாக, 08 முறைப்பாடுகளுடன் தொடர்புபட்ட முறைப்பாடு தீர்ப்பு சபையின் தீர்மானத்தின் கீழான ஒப்பந்ததாரர்களிற்கு உரித்தான கொடுப்பனவுகளிற்கான ஏற்பாடுகள் நிதிக்கூற்றுக்களில் செய்யப்பட்டிருக்கவில்லை. இப்பிணக்குகளின் ஆரம்ப கொடுப்பனவு கிரயம் ரூபா 431.82 மில்லியன் என அறிவிக்கப்பட்டிருந்ததுடன் முடிவாக்கப்பட்ட தொகைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | 431.82 மில்லியன் | அடுத்துவரும் ஆண்டிலிருந்து நிலுவையிலுள்ள பிணக்குகள் இணக்க சபையின் தீர்மானங்களிற்காக ஏற்பாடு செய்ய அல்லது செயற்திட்ட நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது. இருப்பினும், DAB, நடுவர் தீர்ப்பு அல்லது சினேக பூர்வ வாக்கு மூலம் பூர்த்திசெய்யும் வரை ஒப்பந்ததாரரிற்கு செலுத்தவேண்டிய உண்மையான தொகையின் உள்ளடங்குவது சாத்தியமற்றதாக காணப்படும். | ஏற்பாடுகள் அல்லது வெளிப்படுத்தல் இலங்கை பொதுத்தறை கணக்கீட்டு நியமம் இல.08 இன் படி செய்யப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | கைவிடப்பட்ட ஒப்பந்த பொதிகளிலிருந்தான மிகுதிகள் வேலை ஆரம்பிப்பு முற்பணங்கள் நிதிக்கூற்றுக்களில் கணக்கீட்டு நியமங்களின் கீழ் ஓர் ஐய மீளப்பெறவாக வெளிப்படுத்தப்பட்டிருந்தும், அது வெளிப்படுத்தலில் ரூபா 100 மில்லியனால் குறைக்கப்பட்டிருந்தது. | 100 மில்லியன் | அடுத்த வருட நிதிக்கூற்றக்களில் இத் தவரினை சரிசெய்ய கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது. | முழுத்தொகையும் வெளிப்படுத்தப்பட ல் வேண்டும். |
| (உ) | 4 ஏற்பாட்டு மிகுதிகளுடன் தொடர்புபட்டு ரூபா 1,541.6 மில்லியன் தொகையான காசு அல்லாத கொடுக்கல் வாங்கல்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இல 02 இன் படி காசுப்பாய்ச்சல் கூற்றில் சரியாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 1,541.6 மில்லியன் | அடுத்தவருட நிதிக்கூற்றக்களிலிருந்து காசு அல்லாத உருப்படிகளை வேறாக வெளிப்படுத்த கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது. | காசுப்பாய்ச்சல் கூற்று இலங்கை பொதுத்தறை கணக்கீட்டு நியமம் இல 02 இன் படி தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஊ) | ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களின் தேறிய புத்தக பெறுமதியில் குறைவானது முதலீட்டு நடவடிக்கையின் கீழ் ஆதனம் பொறி மற்றும் உபகரண கொள்வனவாக காட்டப்பட்டிருந்த அதேநேரம் ஆண்டு காலத்தின் போது கொள்வனவு ரூபா 5.2 மில்லியன் தொகையாகவிருந்தது. மேலும், வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு மாற்றப்பட்ட சொத்துக்களின் தேறிய புத்தக பெறுமதியின் அதிகரிப்பு காசுப்பாய்ச்சல் கூற்றில் பிழையாக முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் காசுவெளிப்பாய்ச்சலாக காட்டப்பட்டிருந்தது. | 5.2 மில்லியன் | இவ்வகைப்படுத்தும் தவறினை அடுத்தவருட நிதிக்கூற்றுக்களில் சரிசெய்ய கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது. | காசுப்பாய்ச்சல் கூற்று இலங்கை பொதுத்தறை கணக்கீட்டு நியமம் இல 02 இன் படி தயாரிக்கப்படல் வேண்டும். |
| (எ) | மீளாய்வாண்டின் போதான வெளிநாட்டு கடன்கலிலிருந்தான மொத்த செலவுகள் நிகழ்ச்சித்திட்டத்தின் நிதிக்கூற்றக்களின் பிரகாரம் ரூபா 9,570.57 மில்லியனாகவிருந்தும், அது பொதுப்பேரேடு மற்றும் வெளிவளங்கல் திணைக்களம் என்பவற்றில் முறையே ரூபா 10,128.95 மில்லியன் மற்றும் ரூபா 10,073.05 மில்லியன் என பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டிருந்து. இருப்பினும், நிதிக்கூற்று மற்றும் வெளிவளங்கள் திணைக்களம் | 502.48 மில்லியன் | பொதுத்திறைசேரியில் கணக்கில் அல்லது செயற்திட்ட நிதிக்கூற்றுக்களில் கணக்கிடப்பட்ட மொத்த செலவினத்தை ERD இன் செலவின வழங்கள் விபரத்துடன் சரியாக கணக்கிணக்கம் செய்வது சாத்தியமற்றதாகும். | உரிய தரப்பினர்களுடன் கலந்துரையாடப்பட வேண்டியதுடன் வித்தியாசத்தினை குறைக்கவும் வேண்டும். |

என்பவற்றிற்கிடையேயான இவ் வித்தியாசம் ரூபா 502.48 மில்லியனிற்கான காரணம் கணக்காய்விற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

**2.2 சட்டங்கள்,விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை**

| இல | சட்டங்கள்,விதிகள், பிரமாணங்களுக்கான குறிப்புகள் | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | ஒப்பந்தத்தின் குறித்த நிபந்தனையின் உப பிரிவு 14.6 | ஒப்பந்ததாரரினால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய இடைக்கால கொடுப்பனவு பத்திரத்தின் குறைந்தபட்ச பெறுமதி ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்த பெறுமதியால் 1.5 சதவீதமாகும். இருப்பினும், மீளாய்வண்டின்போது 22 பொதிகளின் கீழாக இடைக்கால கொடுப்பனவு பத்திரங்களை பரிசீலனை செய்யும் போது 62 விடயங்கள் தேவையான நிபந்தனையிற்கு கீழ் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | கோவிட் பரவல் மற்றும் மூலதன பற்றாக்குறை போன்ற எதிர்பாராத நிலமைகள் அமுல்படுத்தலின் போதான ஒப்பந்ததாரர் காசுப்பாய்ச்சலில் மீது பாதகமாக தாக்கியிருந்தது. எனவே, வேலை வழங்குனர் குறித்த உபபிரிவினை தவிர்க வேண்டியுள்ளார். | கிரயம், நேரம், மற்றும் ஒப்பந்ததாரரிற்கான தேவையற்ற நன்மைகளை குறைப்பதற்கு ஒப்பந்த நிபந்தனைகளில் குறிப்பிடப்பட்ட விடயங்களை கடைப்பிடித்தல் வேண்டும். |
| (ஆ) | ஒப்பந்த பொது நிபந்தனையின் உபபிரிவு 4.2 | செயலாற்றல் பாதுகாப்பு பத்திரம் ஒப்பந்ததாரர்களினால் அவர்களது சொந்த செலவில் வழங்க வேண்டியிருந்தும், வேறான ஒரு கொடுப்பனவு உருப்படி ஆரம்பகட்ட மற்றும் பொதுவான உருப்படிகளின் கீழான அளவைப்பட்டியலில் செய்யப்பட்டுள்ளமை ஒப்பந்ததாரரிற்கு மீளப்பெற முடியுமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன்படி, கூட்டு மொத்தமாக ரூபா 556.38 மில்லியன் ஒப்பந்ததாரர்களினால் பெறப்பட்ட பாதுகாப்பு பத்திரத்தின் கிரயத்தினை மீளப்பெற ஒப்பந்ததாரரிற்கு மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. மேலும், 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட ஒப்பந்ததாரர்களிடமிருந்து அத்தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செயலாற்றல் பாதுகாப்பு பத்திரத்தினை வழங்குவதற்காக மேற்கொள்ளப்பட்ட இவ் உருப்படி கையளிக்கப்பட்ட ஒப்பந்தங்களிலிருந்து மீளப்பெற முடியாமலிருக்கும். இருப்பினும், வடக்கு, கிழக்கு மற்றும் ஏனைய வருங்கால ஒப்பந்தங்களில் இவ் உருப்படிகள் பீஓகியுவ் விலிருந்து நீக்கப்பட்டுள்ளது. | அளவைப்பட்டியலின் பரிசீலனை விலைமனு ஆவணங்களை வழங்குவதற்கு முன்னர் பெறுகை நிபுணர்கள் மற்றும் தொழிநுட்ப மதிப்பீட்டு குழுவினால் செய்யப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | ஒப்பந்த விபரக்குறிப்பின் உபபிரிவு 108.4 | பிரதான மற்றும் கள ஆய்வுகூடங்களின் ஆய்வுகூட உபகரணம் மற்றும் தளபாடங்கள் நிகழ்ச்சித்திட்ட முடிவில் ஒப்பந்ததாரரிற்கு திருப்பி அனுப்பவேண்டியிருந்தும், ரூபா 615.22 மில்லியன் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அவ் உருப்படிகளிற்காக ஓர் கூட்டுமொத்தமாக (Lumpsum) நிகழ்ச்சித்திட்டத்தினால் செலுத்தப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் ஆர்டிஏவிற்கு ஏதாவது தளபாடம் மற்றும் ஆய்வுகூட மற்றும் அளவை உபகரணங்கள் தேவைப்பட்டால், இந்நிபந்தனைகள் அவ்வாறான நிபந்தனைகளுடன் வழங்க சீரமைக்கப்படும். மேலும் இவ் உருப்படிகள் 2-3 வருடங்களிற்கு மேல் பயன்படுத்தப்பட்டதன் பின்னர் ஒப்பந்த முடிவில் அனேகமாக பாவனையற்ற அல்லது காலம் கடந்த நிலையில் காணப்பட்டது. | பொதுவாக, உரிய சொத்துக்கள் வேலை வழங்குனரால் தக்கவைக்கப்பட்டுள் என. எனவே, இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான ஒப்பந்தத்தின் கிரயம் ஏனைய கடன் வழங்குனர் நிதியளிப்பு செயற்திட்டங்களினால் கையளிக்கப்பட்ட ஏனைய ஒப்பந்தங்களின் கிரயங்களுடன் ஒப்பிடும் போது குறைக்கப்படல் வேண்டும். |

## 3. பௌதீக முன்னேற்றம்

------------------------------

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

---------------------------------------------------------------------------

| இல | கூறுகள் | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | தேசிய மற்றும் கிராமிய வீதிகளின் புனரமைப்பு வேலைகளின் பூர்த்தியாக்கள் மற்றும் பாரமழித்தல். | 2021 திசெம்பர் 16 ஆம் திகதிய புதுப்பிக்கப்பட்ட வசதி நிர்வாக கையேட்டின் பிரகாரம், தென், மத்திய, சப்பிரகமுவ, வடமேல் மற்றும் வடமத்திய மாகாணங்கள் மற்றும் மேல் மாகாணத்திலுள்ள களுத்துறை மாவட்டம் என்பனவற்றிலுள்ள தேசிய வீதிகளின் 248 கி.மீ கள் மற்றும் கிராமிய வீதிகளிலுள்ள 3,108 கி.மீகள் என்பனவற்றின் வீதி புனரமைப்பு வேலைகள் நிகழ்ச்சித்திட்ட காலப்பகுதியின் போது புனரமைக்க எதிர்பார்க்கப்பட்டிருந்தது. இருப்பினும், 4 தேசிய வீதிகளின் 27.43 கி.மீ நீளம் மற்றும் 537 கிராமிய வீதிகளின் 2,062.96 கி.மீ நீளம் என்பனவற்றின் புனரமைப்பு என்பன மாத்திரமே நிகழ்ச்சித்திட்ட ஆரம்பிப்பு திகதியிலிருந்து 06 வருடங்கள் கடந்த பின்னர் 2021 திசெம்பர் | திட்டமிட்ட நீளத்தினை பூர்த்திசெய்வதில் குறைபாடு ஏற்பட்டமைக்கான காரணங்களாவன<br>1. 2015, 2018, 2019 மற்றும் 2020 இல் அரசாங்க மாற்றங்கள் மற்றும் அமைச்சரவை மறுசீரமைப்பு என்பன காரணமாக பெறுகை குழுக்களின் மீளநியமிப்பு போன்ற பீஎம்யூ வின் கட்டுப்பாட்டிற்கு பின்னாலான காரணங்கள் காரணமாக பெறுகை நடவடிக்கையில் தாமதங்கள்.<br>2. ஒப்பந்தகைவிடல்கள், கோவிட் 19 தாக்கங்கள் மற்றும் நீதிமன்ற கட்டளை உத்தரவுகள். | நிகழ்ச்சித்திட்டத்தின் உரிய இலக்குகளை அடைய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 31 இல் உள்ளவாறு பூர்த்திசெய்யப்பட்டு உரிய முகவர்களிற்கு கையளிக்கப்பட்டிருந்தது. | 3. அரசாங்கத்தின் அபிவிருத்தி கொள்கையின் முன்னுரிமையில் மாற்றத்தின் பெறுபேறாலான நிகழ்ச்சித்திட்டத்தின் கீழாக ஏற்கனவே அடையாளப்படுத்தப்பட்ட வீதிகளின் மாற்றம். | |
| (ஆ) | தேசிய வீதிகளின் புனரமைப்பு வேலைகளின் கையளித்தல். | 09 ஒப்பந்த பொதிகளின் கீழான தேசிய வீதிகளின் 423.11 கி.மீ களை புனரமைக்க திட்டமிட்டிருந்தும், 278.11 கி.மீ நீளங்களை உள்ளடக்கும் 06 ஒப்பந்த பொதிகள் மாத்திரமே 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கையளிக்கப்பிட்டிருந்ததுடன் பெறுகை செயன்முறைகூட 145 கி.மீ உள்ளடக்கும் ஏனைய 03 ஒப்பந்தபொதிகளிற்கு பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. | முறையாக வழங்கியிருக்கவில்லை. | நிகழ்ச்சித்திட்டத்தின் உரிய இலக்குகளை அடைய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | தேசிய வீதிகளின் புனரமைப்பு வேலைகளின் பூர்த்தியாக்கல். | அண்மையில் கையளிக்கப்பட்ட ஆர்எம்சீ 06 மற்றும் ஆர்எம்சீ 07 ஒப்பந்தபொதிகளை தவிர்த்து கையளிக்கப்பட்ட வீதி முகாமைத்துவ ஒப்பந்தங்களில் (ஆர்எம்சீ), ஆர்எம்சீ01 ஒப்பந்தப்பொதியின் கீழான அனைத்து நான்கு ஒப்பந்தங்களும் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஏனைய ஒப்பந்தங்களுடன் ஒப்பிடும் போது 8.9 சதவீதத்திற்கும் 23.9 சதவீதத்திற்கும் இடையேயான குறைந்த செயலாற்றலை அறிக்கையிட்டுள்ளது. | கோவிட் 19 பரவல் நிலைமை, சீமெந்து போன்ற மூலப்பொருட்களின் பற்றாக்குறை, நொறுங்கிய மூலப்பொருட்கள், மண்சரிவுகள் போன்ற காரணங்கள் இவ்வீதிப்பிரிவில் உள்ள மூன்று இடங்களில் ஏற்பட்டிருந்ததுடன் பாதகமான காலநிலை இவ் ஒப்பந்தங்களில் குறைந்தசெயலாற்றலில் தாக்கத்தினை ஏற்படுத்தியது. | நிகழ்ச்சித்திட்டத்தின் உரிய இலக்குகளை அடைய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | கைவிடப்பட்ட ஒப்பந்தங்களின் மிகுதி வேலைகளின் பூர்த்தியாக்கல். | 100,000 கி.மீ கிராமிய வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினூடான 04 கைவிடப்பட்ட ஒப்பந்தங்களின் மிகுதி வேலைகளை பூர்த்திசெய்வதற்காக கையொப்பமிட்ட தீர்ப்பனவு உடன்படிக்கையின் விதிகள் மற்றும் நிபந்தனைகளின் பிரகாரம், மிகுதி வேலைகள் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட திகதியிலிருந்து 15 | இச்செயற்திட்டத்திலுள்ள அனேக ஒப்பந்ததாரர்கள், கொடுப்பனவு செய்வதில் தாமதத்தின் காரணமாக பாதிப்படைந்துள்ளனர். | நிகழ்ச்சித்திட்டத்தின் உரிய இலக்குகளை அடைய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மாதங்களிற்குள் பூர்த்தியாக்க உடன்பட்டிருந்தது. 2022 ஜனவரி 31 இல் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட திகதியிலிருந்து 18 மாதங்கள் கடந்திருந்தும், 11 தொடக்கம் 29 சதவீதத்திற்கிடையேயான மிகக்குறைந்த பௌதீக செயலாற்றல் இப்பொதிகளில் அறிக்கையிடப்பட்டிருந்தது. | | |
| (உ) | கைவிடப்பட்ட ஒப்பந்தங்களின் மிகுதி வேலைகளின் பூர்த்தியாக்கல். | ஒப்பந்தம் கைவிடப்பட்ட திகதியிலிருந்து அண்ணளவாக 03 வருடங்கள் கடந்திருந்தும் கைவிடப்பட்ட 12 ஒப்பந்த பொதிகளில் நிகழ்ச்சித்திட்டமானது ஜீ1 மற்றும் கேஎல்02 எனப்பெயரிடப்பட்ட 02 ஒப்பந்தபொதிகளின் மிகுதி வேலைகளை பூர்த்தி செய்ய எவ்வித நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை. | சட்ட செயன்முறைகள் பூர்த்தியானதன் பின்னர் அவ்ஒப்பந்தப் பொதிகளின் மிகுதி வேலைகளை பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | நிகழ்ச்சித்திட்டத்தின் உரிய இலக்குகளை அடைய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**3.2 ஒப்பந்த நிர்வாகம்**

| இல | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கைவிடப்பட்ட 12 ஒப்பந்த பொதிகளில், 6 ஒப்பந்த பொதிகளின் மிகுதி வேலைகள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இச் செயற்திட்டத்தினூடாக செய்து முடிக்க மீள கையளிக்கப்பட்டிருந்ததுடன் மீள்கையளிக்கப்பட்ட ஒப்பந்தங்களின் பெறுமதி உண்மையான ஒப்பந்த விலையுடன் ஒப்பிடும் போது ரூபா 4,808.8 மில்லியனால் அதிகரித்து காணப்பட்டது. | இப்புதிய ஒப்பந்தங்களின் ஏல விலைகள் அந்நேரத்தில் மூலப்பொருட்களின் விலைகள் உயர்வாக போனதால் உண்மையான ஒப்பந்தங்களை விட அதிகமாக உள்ளது. இருப்பினும் ஏல விலைகளிற்கிடையேயான வித்தியாசம் வேலை வழங்குனர்களின் கொடுப்பனவுகளினூடாக கைவிடப்பட்ட ஒப்பந்தங்களின் ஒப்பந்ததாரர்களிடமிருந்து அறவிடப்படல் வேண்டும். | மேலும் தாமதமின்றி நிர்மானத்தினை பூர்த்திசெய்ய தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ஓர் தீர்ப்பனவு உடன்படிக்கை கிராமிய வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் 100,000 கி.மீ ஊடாக அதே தோல்வியுற்ற ஒப்பந்ததாரருடன் 04 கைவிடப்பட்ட ஒப்பந்தங்களின் மீகுதி வேலைகளை பூர்த்திசெய்ய கையொப்பமிடப்பட்டிருந்ததுடன் அவ் ஒப்பந்தங்களின் பெறுமதி உண்மையான ஒப்பந்த பெறுமதியுடன் ஒப்பிடும் போது ரூபா 417.6 மில்லியனால் அதிகரித்து காணப்பட்டமையும் வெளிப்படுத்தப்பட்டது. | ஒப்பந்ததாரர் நீதிமன்ற வழக்குகளை மீளப்பெற்று ஐ.பீ.சீ களிலிருந்து மீளப்பெறப்படாத முற்பணங்களை மீளவழங்க உடன்பட்டதனால் 100,000 கி.மீ கிராமிய வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தொடர அதே ஒப்பந்ததாரரினை அனுமதிக்க தீர்மானிக்கப்பட்டிருந்தது. | மேலும் தாமதமின்றியும் மேலதிக கிரயங்களின்றியும் நிர்மானத்தினை பூர்த்திசெய்ய தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் 100,000 கி.மீ கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கு வழங்கப்பட்ட ஒப்பந்தபொதிகளுடன் தொடர்புபட்ட ஒப்பந்ததாரர்களிற்கும் இடையேயான தீர்ப்பனவு உடன்படிக்கையின் பிரகாரம், மீளஅறவிடப்படாத வேலை ஆரம்பிப்பு முற்பணங்களை செய்யப்பட்ட வேலைக்கான புதிய குறியீடுகள் மற்றும் விலை சீராக்கம், செய்யப்பட்ட வேலைக்கான ஏனைய செலுத்த வேண்டிய கொடுப்பனவுகள் மற்றும் இடைக்கால பட்டியல்கள் என்பனவற்றின் கீழான விலை விரிவாக்கத்திற்கான உறுதிப்படுத்தப்பட்ட கொடுப்பனவு தொகையினூடாக தீர்ப்பனவு செய்ய இருதரப்பினர்களும் உடன்பட்டிருந்தனர். இருப்பினும், அப்பொதிகளுடன் தொடர்புபட்டு 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீளஅறவிடப்படாத வேலை ஆரம்பிப்பு முற்பணங்கள் ரூபா 963.26 மில்லியனாக காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | 100,000 கி.மீ கிராமிய வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமானது அம்முற்பணங்களை கொடுத்து தீர்க்க தவரியிருந்ததுடன் ஒப்பந்ததாரரினால் செய்துமுடிக்கப்பட்ட வேலை முற்பண கொடுப்பனவுகளை கழிக்க போதுமானதல்ல என அறிவித்திருந்தனர். | பெற வேண்டிய மிகுதிகளை மீளப்பெற்றுக்கொள்ள நிகழ்ச்சித்திட்த்தினால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 06 மிள் கையளிக்கப்பட்ட ஒப்பந்த பொதிகளுடன் தொடர்புபட்ட மீளஅறவிடப்படாத வேலை ஆரம்பிப்பு முற்பண தொகை ரூபா 1,453.09 மில்லியன் பெறுமதியாகவிருந்தது. மேலும், 02 கைவிடப்பட்ட ஒப்பந்த பொதிகளுடன் தொடர்புபட்ட மீள அறவிடப்படாத வேலை ஆரம்பிப்பு முற்பண தொகை ரூபா 377.07 மில்லியன் நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஓர் மேலதிக கிரயமாக இருக்கக்கூடும். | ஒப்பந்ததாரர்கள் இவ் ஒப்பந்தங்களிற்கான முற்பண உறுதிப்பத்திரத்திற்கான பணமாக்கலினை தடுக்க நீதிமன்ற கட்டளையை பெற்றுள்ளனர். நீதிமன்ற வழக்குகள் நடைபெற்றுக்கொண்டிருப்பதுடன் வீதி அபிவிருத்தி அதிகார சபை நீதிமன்ற தீர்ப்பு செயன்முறைப்படுத்தப்பட்டதன் பின்னர் மாத்திரமே முற்பண கொடுப்பனவுகளை மீள அறவிட முடியாமலிருக்கம். | பெற வேண்டிய மிகுதிகளை மீளப்பெற்றுக்கொள்ள நிகழ்ச்சித்திட்த்தினால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (உ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு, 43 பிணக்ககள் பிணக்குகள் இணக்க சபையின் தீர்மானங்களிற்காக (DAB) கையளிக்கப்பட்டுள்ளதுடன் அதில், அவ் | ஐ-வீதியில் ஏதாவது கைவிடப்பட்ட ஒப்பந்தங்கள் மற்றும் மீளஅறவிடப்படாத முற்பணகொடுப்பனவுகளினால் | ஒப்பந்ததாரர்களுடனான பிணக்குகளை குறைக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| DAB நிர்மானத்திற்கான பிணக்கின் மொத்த ஆரம்ப கிரய பெறுவனவு தொகை ரூபா 1,698.73 மில்லியன் ஒப்பந்ததாரரிற்கு சாதகமாகவிருந்தது. இருப்பினும், கொடுப்பனவுகள் ஜீ2 பொதிக்கான தொகை ரூபா 107.72 மில்லியன் தவிர 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இது தொடர்பில் நிகழ்ச்சித்திட்டத்தினால் செய்யப்பட்டிருக்கவில்லை. | ஆர்டிஏ விற்கு செலுத்த வேண்டி ஏதும் காணப்பட்டால், வெற்றிகரமாக பூர்த்திசெய்யப்பட்ட ஒப்பந்தங்களில் ஏதாவது அனுமதிக்கப்பட்ட பெறுவனவுகளை விடுவிக்காமலிருக்க ஆர்டிஏ வானது தீர்மானம் எடுத்திருந்தது. எனவே ரூபா 695.1 மில்லியன் தொகையான ஆரம்ப கிரய கொடுப்பனவுக்கு அவர்கள் உரித்துடையவர்களாக காணப்பட்டாலும் கூட ஒப்பந்ததாரர்களிற்கு செலுத்தப்படவில்லை. | |

### 3.3 புறநடையான கொடுப்பனவுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|
| ரூபா 45.54 மில்லியன் தொகையான வட்டி மற்றும் ஒப்படைப்பு கட்டணங்கள் மீளாய்வாண்டின் போதான வழங்கப்படாத/பயன்படுத்தப்படாத வருமானங்கள் மீது கடன்வழங்கும் முகவரிற்கு சிக்கனமற்ற முறையில் செலுத்தப்பட்டிருந்ததுடன் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரண்ட வட்டி மற்றும் ஒப்படைப்பு கட்டணங்கள் ரூபா 1,516.79 மில்லியனாக இருந்தது. | செயற்திட்டத்தின் செயலாற்றல் நன்றாக இருப்பின் ஒப்படைப்பு கட்டணங்களின் செயலாற்றலினை குறைக்க முடியுமானதுடன் கடனில் ஒப்படைப்பு கட்டணத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகைக்குள் வைத்திருக்கவும் முடியும். | தேவையற்ற கிரயங்களை குறைக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |